# கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

### அ.சா.7  (LW 10 )

| **பெயர்** | முருகன் | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க  பெயர்** | செல்லமணி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **17.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு  10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜதானிக் கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன்.  4ம் வகுப்பு படித்துள்ளேன்.  என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை ஒருநாள் ஊருக்குள் போலிசார் வந்து கேட்டதால் போட்டேன். என்னுடன் வேறு யாரும் கையொப்பம் போடவில்லை. **பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2. ஆகும்.  என்னிடம் காட்டப்படும்** அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான்.அந்த கையொப்பத்தையும் அப்போதுதான் போட்டேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது. அத்தாட்சியில் **உள்ள 2வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3. ஆகும்.**  போலிசார் என்ன நடந்தது என கேட்டார்கள். தெரியாது என சொன்னேன்.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.06.2022 அன்று இரவு 07.15 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த மூர்த்தி என்பவரும் எங்கள் ஊரில் பகவதியம்மன் கோவிலில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த அம்மையநாயக்கனுர் காவல் ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்

132/2022 சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும் மூர்த்தியும் கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு இரவு 08.00 மணிக்கு சம்பவ இடத்தில் ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் ஆகியவற்றை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அதில் நானும் மூர்த்தியும் கையொப்பம் செய்துவிட்டு எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.17 08:52:19 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.